சினிமா டிக்கெட்டிற்கு ஒரே வரி விதிக்கும் திட்டம்.

36—(*வினா எண். 5325) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சினிமா டிக்கெட்டில் பல்வேறு வரிகளுக்குப் பதிலாக ஒரே வரியை விதிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: (அ) ஆம்.

(ஆ) இணக்க வரி நடைமுறையில் இல்லாத இடங்களில் உள்ள சினிமா திரையரங்குகளில் 6 விதமான கீழ்க்கண்ட வரிகள் செலுத்த வேண்டி இருக்கின்றன.

(1) கேளிக்கை வரி; (2) கேளிக்கை வரி மீதான மேல் வரி (3) கேளிக்கை வரி மீதான கூடுதல் மேல் வரி: (4) காட்சி வரி (5) காட்சி வரி மீதான மேல் வரி, (6) காட்சி வரி மீதான கூடுதல் மேல் வரி. இந்த 6 விதமான வரிகளிலிருந்து கிடைக்கக் கூடிய வருவாய், காட்சிக்கான மொத்த நுழைவு கட்டணத்திலே சுமார் 53 சதவீதம் ஆகும். இந்த 6 விதமான வரிகளை ஒன்றாக இணைத்து ஒரே வரியாக—6 விதமான வரிகளுக்குப் பதிலாக ஒரே வரியாக—விதிக்கலாமா என்பது குறித்து அரசு தற்போது ஆய்வு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா டிக்கெட்டில் பல்வேறு வரிகளுக்குப் பதிலாக ஒரே வரியை விதிக்கும் திட்டம் எப்போது, எந்த வருடம் ஆய்வு செய்யப்பட்டது? எப்போது எந்த வருடத்தில் அந்த ஆய்வு முடிந்து செயலுக்கு வரும்? இந்த சினிமா டிக்கெட் வரியினால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 விதமான வரிகளில் கேளிக்கை வரி, கேளிக்கை வரி மீதான மேல் வரி, கேளிக்கை வரி மீதான கூடுதல் மேல் வரி ஆகிய மூன்று வரிகளும் பார்வையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன. காட்சி வரி, காட்சி வரி மீதான மேல் வரி, காட்சி வரி மீதான கூடுதல் மேல் வரி ஆகியவை திரையரங்கு உரிமையாளர்களிடத்திலேயிருந்து பெறப்படுகிறது. திரையரங்கு உரிமையாளர்களிடத்திலும் பல்வேறு நிலைகளிலிருந்து, இந்த வரியை ஒரே வரியாகப் போட வேண்டுமென்று பல்வேறு மட்டத்திலே அரசுக்குப் பரிந்துரை பெறப்பட்டது.

அந்த அடிப்படையில் வணிக வரித் துறையினிடத்திலிருந்தும் பரிந்துரை—இந்த 6 வரிகளை இரண்டு வரிகளாக அதாவது டிக்கெட்டுகளிலே வைக்கப்பட்டிருக்கின்ற 3 வரிகளை ஒரே வரியாகவும் அதைப் போல காட்சிகளின் மீது செலுத்தப்படு கின்ற 3 வரிகளை ஒரே வரியாகவும், ஆக இந்த வரிகளை இரண்டாகப் பிரிக்கலாம் என்று அரசுக்குப் பரிந்துரை—அனுப்பியுள்ளார்கள். இருந்தாலும் அரசு இதை ஒட்டு மொத்தமாக ஒரே வரியாகச் செலுத்தலாம் என்று ஆய்வு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இக்கேள்வி நீக்கப்படுகிறது.

Increasing of irrigation facilities of Coovam river in Chingleput District.

37—(* Q. No. 4890) Thiru G. ANANTHA KRISHNA: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether the Government has plans to introduce a system for Coovam river flowing in Chengleput district to increase the irrigation facilities to the parts of the district where the river is flowing; and

(*b*) if so, the steps taken thereon?

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.